# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 68/11 — 1979 දෙසැම්බර් 26 වැනි බදාදා — 1979.12.26

68/11 ம் இலக்கம்—1979 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பீ. 21/78.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

டபிள்யூ. எம். ஏ. விஜேரத்ன பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, திசெம்பர் 24. 1979.

**கட்டளைச்சட்டம்**

1. இக்கட்டளைச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1980 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. நீக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 85 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 1974 பெப்பிருவரி 10 ஆம் தேதிய 105/5 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழ கங்கள் சட்டத்தின் 140 (2) ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளைச்சட்டம் எனக் கருதப்பட்டதுமான 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பட்ட வகுப்புக்கு மேற்பட்ட கமத் தொழிற் கல்வி நிறுவக நியதிச்சட்டம், மேற்கூறிய நியதிச்சட்டத்தின் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் நீக்கப்படுகின்றது.

3. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், பட்ட வகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவகம் என அறியப்படும் ஒரு நிறுவகம் (அது இதனகத்துப் பின்னர் " நிறுவகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. இந்நிறுவகம், இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும்; இப்பல்கலைக் கழகம், இதனகத்துப் பின்னர் " பல்கலைக்கழகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்.

5. சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகட்கும், ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றிற்கும் அமைய, நிறுவகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாணவரை அனுமதித்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில், ஆணைக்குழு அங்கீகரிக்கக்கூடியவாறாக கமத்தொழிற் கல்வியின் அத்தகைய சிறப்புக்கூறுகளில் பட்டவகுப்புக்கு மேற்பட்ட போதனை, பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடுசெய்தல் ;



2—A 47027

(இ) நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஈ) கமத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(உ) விலங்கு வேளாண்மை எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஊ) பெருந்தோட்டக் கைத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய் செயலாளரின் நியமத்தர் ;

(எ) தெங்கு ஆராய்ச்சி நிறுவகப் பணிப்பாளர் ;

(ஏ) இரப்பர் ஆராய்ச்சி நிறுவகப் பணிப்பாளர் ;

(ஐ) தேயிலை ஆராய்ச்சி நிறுவகப் பணிப்பாளர் ;

(ஒ) கமத்தொழிற் பணிப்பாளர் ;

(ஓ) விலங்கு உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் ;

(ஔ) ஆராய்ச்சி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள பதில் கமத்தொழிற் பணிப்பாளர் ;

(க) பல்கலைக்கழகத்தின் கமத்தொழில்துறைத் தலைவர் ; அத்துடன்

(ங) பல்கலைக்கழகத்தின் விலங்கு மருத்துவ விலங்கு அறிவியல் துறைத் தலைவர், அத்துடன்;

(2) பின்வரும் வேறு உறுப்பினர்கள் ; அதாவது—

(அ) கமத்தொழிற் கல்வியின் ஒவ்வொரு சிறப்புக்கூறிலிருந்தும் கமத்தொழில் துறையால் அதன் உறுப்பினருள் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(ஆ) கல்வி, உயர்தொழில், அறிவியல், கைத்தொழில், கமத்தொழில், நிருவாகச் செயலகுகளில் சிறப்புச் சேவை ஆற்றியுள்ள ஆட்களுளிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்.

11. (1) முகாமைச் சபையின் தவிசாளரே பணிப்பாளராதல் வேண்டும் : அவரே சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைவகித்தல் வேண்டும். தவிசாளர் ஒரு கூட்டத்தில் தலைமைவகிக்க முடியாதிருந்தால், உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள எவரேனும் ஓர் உறுப்பினரைத் தலைமைவகிக்கவெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட அல்லது தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர், முன்னரே பதவியை வறிதாக்கினலொழிய, விடயத்துக்கேற்ப அவர் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றுண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும். என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளத் தெரிவுசெய்யப்பட அல்லது மீள நியமிக்கப்படத் தகவுடையராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறுயினும், தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவிக் காலம் முடிவடைவதன் முன்னர் பதவியை வறிதாக்கினல், அவரை அடுத்துறுபவர், அவர் முன்னரே தமது பதவியை வறிதாக்கினலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும் :

ஆயின், மேலும் ,தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும் எவ் அந்தஸ்து அல்லது எவ் உறுப்பாண்மையின் பயனைக் கொண்டு சபையின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராயிருந்தாரோ அவ் அந்தஸ்தை அல்லது உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் வரை மட்டுமே அப்பதவியை வகித்தல் வேண்டும்.

(3) முகாமைச் சபையின் தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர் பணிப்பாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்படக் கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(4) முகாமைச் சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்படக் கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(5) முகாமைச் சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் வராமைக்காய லீவு இன்றி சபையின் அடுத்துறும் மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறின், சபையின் உறுப்பினர் என்ற தமது பதவியை அவர் வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும் ; அதனல் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புதற்கு ஆணைக்குழு தக்கவோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(6) முகாமைச் சபையின் உறுப்பினர் ஒருவர் எந்த ஊதியத்துக்கும் உரித்துடையவராதலாகாது : ஆனல் பதவிவழி உறுப்பினர் அல்லாத உறுப்பினர் ஒருவர்க்கு, நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும் அத்தகைய படிகள் கொடுக்கப்படலாம்.

(7) முகாமைச் சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் சபையின் மொத்த உறுப்பினரில் மூன்றிலொரு பங்கினராக இருத்தல் வேண்டும்.

(8) முகாமைச் சபை அவசியமாகும் போதெல்லாம் கூடுதல் வேண்டும்; எவ்வாறுயினும் ஓர் ஆண்டுக்கு எட்டுத் தடவைகளுக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

(9) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும் போதெல்லாம் அல்லது முகாமைச் சபையின் மொத்த உறுப்பினரில் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் ஒன்றைப் பெறுவதன் மேல் ஒரு வாரத்துக்குள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

12. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, முகாமைச் சபையானது, இக்கட்டளைச்சட்டத்தால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, முகாமைச்சபையானது, நிறுவகத்திலுள்ள போதனை, கல்வி, ஆராய்ச்சிகள், தேர்வுகள் ஆகியவற்றின் மீது கட்டுப்பாட்டையும் அவற்றின் பொது நெறிப்படுத்துகையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பந்திகளினால் முகாமைச் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, முகாமைச் சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும், கட்டுப்படுத்தலும், நிருவகித்தலும் ;

(ஆ) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும் தீர்மானித்தலும் ;

(இ) குறித்த நோக்கங்களுக்காக நிறுவகத்தின் கையடைவில் வைக்கப்பட்ட நிதிகள் எவற்றையும் நிருவகித்தல் ;

(ஈ) நிறுவகத்துக்கு அளிக்கப்படும் மரணசாதனக்கொடைகள், நன்கொடைகள், வேறு ஆதன வழங்கல்கள் ஆகியவற்றை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெற்றுக்கொள்ளலும் ஏற்றுக்கொள்ளலும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டு அறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் சீர்தூக்கிப்பார்த்தலும், அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும் ;

(ஊ) நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளைப் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும் ;

(எ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபை அல்லது கற்கைச் சபைகளுடன் கலந்தாலோசித்து கமத்தொழிற் கல்வியின் பல்வேறு சிறப்புக் கூறுகளிலும் வழங்கப்படவேண்டிய பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றையும், அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றிற்குத் தகைமைபெற விரும்பும் மாணவர் பின்பற்றவேண்டிய கற்கை நெறிகளையும், பயிற்சியையும், சித்தியடைய வேண்டிய தேர்வுகளையும், திருப்திசெய்ய வேண்டிய வேறு நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அக் கருமத்துக்காக துணைவிதிகள் வரைதலும் அத்தகைய வரைவுகளைச் சட்டமாக்குவதற்காகப் பல்கலைக் கழகப் பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

ஆயின், எவ்வாறுயினும், சம்பந்தப்பட்ட கற்கைச் சபையினால் அல்லது கற்கைச் சபைகளினால் செய்யப்பட்ட அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர் அன்றி, கற்கைநெறிகள், தேர்வுகள் என்பன தொடர்பான துணைவிதிகள் எதுவும் ஆக்கப்படுதலாகாது ;

(ஐ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையினால் அல்லது கற்கைச் சபைகளினால் செய்யப்பட்ட அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர், கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பிலான ஒழுங்கு விதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளைப் பல்கலைக்கழக மூதவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஒ) எக்கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டும் அல்லது ஆக்கப்படலாமென அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமத்துக்காக விதிகள் ஆக்குதலும், விடயத்துக்கேற்ப அத்தகைய வரைவுகளைச் சட்டமாக்குவதற்காகப் பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு அல்லது பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஓ) நிறுவகத்தின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங்கள், சாதனங்கள், வேறு பொருள்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடுசெய்தல் ;

(ஔ) பல்கலைக்கழகத்திற்குப் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறுகப் பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள், வேறு பதவிகள் ஆகியவற்றை நிறுவலும், இல்லாதாக்குதலும், இடைநிறுத்திவைத்தலும் ; அத்துடன்

(ii) நிறுவகத்திற்கு நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்கள், அலுவலர்கள், வேறு ஊழியர்கள் ஆகியோரின் தகைமைகள் ;

(க) நிறுவகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களை இடைநிறுத்திவைக்கும்படி, வேலை நீக்கும்படி அல்லது வேறு வகையில் தண்டிக்கும்படி பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல் ;

(ங) நிறுவகத்தின் உவந்த ஆசிரியர், தேர்வாளர் என்போராக ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ற அத்தகைய ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ச) சம்பந்தப்பட்ட கற்கைச் சபை அல்லது கற்கைச் சபைகளின் அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர், பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு ஆணைக்குழுவிற்குப் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(i) இப்பொழுதுள்ள கற்கைச் சபைகளை மீளவமைத்தல், புதிய கற்கைச் சபைகளை அமைத்தல் ஆகியவற்றிற்கு ஏற்ற திட்டங்கள் ; அத்துடன்

(ii) கமத்தொழிற் கல்விச் சிறப்புகளை அந்தந்த கற்கைச் சபைகட்குக் குறித்தொதுக்குதல் ;

(ஞ) தக்கவையென அது கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமித்தலும் அவற்றின் விசாரணை விடயங்களைக் குறித்துரைத்தலும், அவற்றின் அறிக்கைகளை ஆய்ந்து, அத்தகைய அறிக்கைகளைத் திரிபுடனோ திரிபுகளின்றியோ அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும் ;

(ட) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் அல்லது கற்கைச் சபைகளின் கலந்தாலோசனையுடனும் பல்கலைக் கழகத்தின் ஒருப்பாட்டுடனும், கற்கை நெறிகட்கு மாணவரை அனுமதிப்பதற்கான தேவைப்பாடு களைத் தீர்மானித்தல் ;

(ண) பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானம் உட்பட, நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை, நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ், அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் கீழ், நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை எப்பிணைப் பொறுப்புகளில் முதலீடு செய்தல் சட்டமுறையானதோ, அப்பிணைப்பொறுப்பு எதிலும் முதலீடு செய்தலும், அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு, அத்தகைய எவையேனும் பணங்களை இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும், அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தலும், அல்லது உடனடிச் செலவுக்குத் தேவைப்படாததான அத்தகைய பணங்களின் ஏதேனும் பகுதியை ஆணைக்குழுவினல் அங்கீ கரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதலும் ; அத்துடன்

(த) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் அவற்றைப் பிரயோகிப்பதற்கு வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படாதுள்ள நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல் :

ஆயின், சபையானது ஏதேனும் கல்விசார் விடயம் பற்றித் தோதான கற்கைச் சபை அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து சபைக்கு அனுப்பிவைப்பதற்கான சந்தர்ப்பத்தை அக்கற்கைச் சபைக்கு முதலில் கொடுத்திருந்தாலொழிய, கல்விசார் விடயம் தொடர்பான தீர்மானம் எதுவும் சபையினல் நிறைவேற்றப்படுதலாகாது :

ஆயின், மேலும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் அன்றி, அவ்வாறு நிறைவேற்றப்பட்ட எத்தீர்மானத்தின் மீதும் செயலாற்றுதலாகாது.

இப்பந்தியில் " கல்விசார் விடயம் " என்பது தோதான கற்கைச் சபையின் கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்புக்கும் அமைந்த ஏதேனும் விடயம் என்று பொருளாகும்.

13. கீழ்வரும் கமத்தொழிற் சிறப்புகள் ஒவ்வொன்றிற்கும் முகாமைச் சபையினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு கமத்தொழிற் சிறப்புகள் ஒவ்வொன்றிற்கும், நிறுவகம் ஒரு கற்கைச் சபையைத் தாபித்தல் வேண்டும் :—

(அ) கமத்தொழில் உயிரியல் ;

(ஆ) கமத்தொழில் இரசாயனம் ;

(இ) கமத்தொழில் பொருளியலும் விரிவாக்கமும் ;

(ஈ) கமத்தொழில் எந்திரவியல் ;

(உ) விலங்கு அறிவியல் ; அத்துடன்

(ஊ) பயிர் அறிவியல்.

14. (1) ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வரும் ஆட்களை கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பல்கலைக்கழகத்தின் கமத்தொழில் துறையால் தோதான சிறப்புக்கூறுக்குரிய ஆசிரியர்களுளிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், கமத்தொழிற் கல்வியிலுள்ள அந்தச் சிறப்புக்கூறிலுள்ள பேராசிரியர் அல்லது பேராசிரியர்கள் உட்பட்டவருமான நான்கு உறுப்பினர்கள் ; அத்துடன்

(இ) கமத்தொழிலின் தோதான சிறப்புக்கூறில் புகழ்பெற்ற ஆட்களுளிருந்து, முகாமைச் சபையால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

(2) ஏதேனும் கற்கைச் சபை, முகாமைச் சபையின் ஒருப்பாட்டுடன் குறித்தவொரு நோக்கத்திற்கும் குறித்தவொரு காலப்பகுதிக்கும் ஆள் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களை உடன்சேர்க்கலாம் ; ஆனல் அவ்வாறு உடன்சேர்க்கப்பட்ட ஆள் எவரும் தேர்தலுக்கு நிற்கவோ அல்லது அத்தகைய கற்கைச் சபையின் எந்தக் கூட்டத்திலும் வாக்களிக்கவோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(3) பதினோராம் பந்தியின் 2, 4, 5 ஆகிய உட்பந்திகளின் ஏற்பாடுகள், எந்தக் கற்கைச் சபையின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு கற்கைச் சபையும் ஒரு தவிசாளரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவரை அக்கற்கைச் சபை அதன் உறுப்பினருள் இருந்து தெரிவுசெய்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு கற்கைச் சபையும் ஒரு செயலாளரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர் அச்சபையால் அதன் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினருள் இருந்து தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

(6) ஏதேனும் கற்கைச் சபையின் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் உடன்சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் இருந்தால் அவர்கள் நீங்கலாக நான்கு உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு கற்கைச் சபையும் அவசியமாகும்போதெல்லாம் கூடுதல் வேண்டும் ; எவ்வாறுயினும், ஓர் ஆண்டுக்கு ஆறு தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

15. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு கற்கைச் சபையும், சம்பந்தப்பட்ட கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறிலுள்ள போதனை, கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகிய வற்றின் கட்டுப்பாட்டையும் பொதுவான நெறிப்படுத்துகையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கற்கைச் சபையும், (1) ஆம் உட்பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, சம்பந்தப்பட்ட கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறு தொடர்பில் பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) முகாமைச் சபை அதற்கு ஆற்றுப்படுத்திய ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப் பார்த்து அறிக்கை செய்தல் ;

(ஆ) அந்தக் கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறில் உள்ள கற்கை நெறிகள், கற்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித் திட்டங்கள், தேர்வுகள் என்பன சம்பந்தமான எல்லாக் கருமங்கள் பற்றியும் முகாமைச் சபைக்கு விதந்துரைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் ;

(இ) சிறப்பான ஏதேனும் விடயத்தை அல்லது எவையேனும் விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து அதன்மீது அல்லது அவற்றின்மீது அறிக்கைசெய்யும் நோக்கத்திற்காகக் கற்கைச் சபை உறுப்பினர் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல் ;

(ஈ) கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவற்றுக்கு மாணவரை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(உ) அந்தக் கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறிலுள்ள கற்கை நெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளை முகாமைச் சபைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஊ) ஆசிரியர்கள், தேர்வாளர்கள் என்போராக அங்கீகாரம் பெறுவதற்குப் பொருத்தமான ஆட்களை முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(எ) சம்பந்தப்பட்ட கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறில் விதித்துரைத்த தேர்வுகளில் சித்தியடைந்தவரும் விதித்துரைத்த வேறு நிபந்தனைகளைத் திருப்தி செய்தவருமான ஆட்களுள் எவர்கள் அந்தச் சிறப்புக்கூறிலுள்ள பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவை அளிக்கப்படுவதற்குத் தகவுடையவர் என முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள் பதக்கங்கள், வேறு பரிசுகள் ஆகியனவற்றுக்கான போட்டிக்குரிய முறையையும் நிபந்தனைகளையும் முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள் பதக்கங்கள், வேறு பரிசுகள் ஆகியன அளிப்பதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களை முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ; அத்துடன்

(ஒ) முகாமைச் சபைக்கு பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(i) இப்போதுள்ள கற்கைச் சபைகளை மீள அமைப்பதற்கும் புதிய கற்கைச் சபைகளை அமைத்தற்கும் ஆன திட்டங்கள் ; அத்துடன்

(ii) அந்தந்தக் கற்கைச் சபைகளுக்கு கமத்தொழிற் கல்வியின் சிறப்புக்கூறுகளைக் குறித்தொதுக்கல்.

16. அரசாங்கத்தின் நிதி ஆண்டு எதுவோ அதுவே நிறுவகத்தின் நிதி ஆண்டாதல் வேண்டும்.

17. (1) நிறுவகமானது பட்டவகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவக நிதியம் என அழைக்கப்படும் ஒரு நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அது இதனகத்துப் பின்னர் " நிதியம் " எனக் குறிப்பீடு செய்யப்படும் ; அந்நிதியத்துள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ;

(இ) நிறுவகத்தின் உதவிக்கான மானியங்களாகப் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டவையும் ஆணைக்குழுவால் செலவழிக்கப்பட்டவையுமான பணங்கள் ; அத்துடன்

(ஈ) எவ்வகையான மூலத்திலிருந்தும் பெறப்பட்டவையும் நிறுவகத்துக்குரியவையுமான வேறெல்லாப் பணங்களும்.

(2) குறித்த ஒரு மாதத்திற்குள் நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட பணங்கள் யாவற்றினதும் ஒரு பொழிப்பு, தோதான வருவாய்த் தலைப்புகளின்கீழ் வகுக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் முடிவிற்குள், பணிப்பாளரால் ஆணைக்குழு அறிதற்காக அதற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. பணிப்பாளர் பின்வரும் கடமைகளை உடையவராயிருத்தல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் கணக்குகளை கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் ;

(ஆ) நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெற்றுக்கொள்ளுதலும் அத்தகைய பணங்களைத் தகுந்த கணக்குத் தலைப்புகளில் வரவுவைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் அத்துடன்,

(ஈ) ஆணைக்குழு தேவையெனக் கோரும் அத்தகைய மூன்றாண்டுக்கொரு முறையான மதிப்பீடுகளையும், அடுத்துவரும் ஆண்டுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் முகாமைச் சபைக்காகத் தயாரித்தல் :

ஆயின், எவ்வாறுயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம், நிறுவகத்தின் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் எந்நோக்கத்துக்காக அல்லது எக்குறிக்கோளுக்காக முறையாக வழங்கப்பட்டனவோ, அந்நோக்கம் அல்லது அக்குறிக்கோள் அல்லாத வேறு நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படலாகாது.

19. (1) நிறுவகமானது, அதன் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகளையும் புள்ளிவிவரங்களையும் பற்றிய ஆண்டுக் கூற்றொன்றை ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய படிவத்திலும் முறையிலும், அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் அந்நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

20. ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வதற்கு இயைபாகவுள்ள, சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் அத்தகைய ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வதற்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

21. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், நிறுவகமானது பல்கலைக் கழகத்தின் ஒருப்பாட்டுடனும், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், ஆசிரியர்களையும், வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகம் அதன் சொந்தப் பணியாட்டொகுதியினரிலிருந்து பணியாட்டொகுதியினரை விடுவிப்பதன்மேல் நிறுவகப் பணியாட்டொகுதியினருக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விடயத்துக்கேற்றவாறு நிறுவகப் பணியாட்டொகுதியினர், ஆணைக்குழுவினர் அல்லது பல்கலைக்கழகம் நியமிக்கலாம். சட்டத்தின் X ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், நிறுவகப் பணியாட்டொகுதி நியமனங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் ஓர் அலுவலர், ஆசிரியர் அல்லது வேறு ஊழியர் முழுநேர அடிப்படையில் நிறுவகத்தில் சேவை செய்ய விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகமானது, பல்கலைக்கழகத்திலுள்ள அவரது நிலையான பதவிக்கான சம்பளத்தையும் படிகளையும் அவருக்குக் கொடுத்தல் வேண்டும். வேறேதேனும் விடயத்தில், சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியருக்கு, நிறுவகமானது பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய படிகளைக் கொடுக்கலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

22. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராக இருப்பதற்கு எவரேனும் ஆள் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா, அல்லது உடன்சேர்க்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி, அல்லது அதன் உறுப்பினராகவிருப்பதற்கு உரித்துடையாரா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழின், அக்கேள்வி ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும் ; அது பற்றி ஆணைக்குழுவின் முடிவு இறுதியானதாயிருத்தல் வேண்டும்.

23. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஒரு வெற்றிடம் அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அத்தகைய உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படலாகாது.

24. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல், கமத்தொழில் கல்வியின் பல்வேறு சிறப்புக்கூறுகளிலும் பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் சூட்டுவதற்கும் ஆன தத்துவம் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமே உரித்தாக்கப்படல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகம், நிறுவகத்தின் விதப்புரையின் பேரில் மட்டுமே அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குதலும் சூட்டுதலும் வேண்டும்.

25. இக்கட்டளைச்சட்டத்தில்—

"சட்டம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும் ;

"தோதான சாதனம்" என்பது மேற்கூறிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச்சட்டம், நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி எனப்பொருள்படும் ;

"ஆணைக்குழு" என்பது மேற்கூறிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு எனப் பொருள்படும் ;

"கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறு" என்பது கமத்தொழில் உயிரியல், கமத்தொழில் இரசாயனம், கமத்தொழில் பொருளியலும் விரிவாக்கமும், கமத்தொழில் எந்திரவியல், விலங்கு அறிவியல், பயிர் அறிவியல் அல்லது பல்கலைக்கழகத்தினதும் நிறுவகத்தினதும் விதப்புரையின் பேரில் ஆணைக்குழு அங்கீகரித்த வேறு ஏதேனும் சிறப்புக்கூறு எனப் பொருள்படும் ; அத்துடன்

"ஆசிரியர்" என்பது ஒரு பேராசிரியர், இணைப்பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர், விரிவுரையாளர் அல்லது உதவி விரிவுரையாளர் என அல்லது எப்பதவி வகிப்பவர் ஓர் ஆசிரியராக உள்ளாரோ அப்பதவியெனக் கட்டளைச்சட்டத்தால் வெளிப்படுத்தப்படும் வேறேதேனும் பதவியை வகிப்பவர் எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.